107

# இரவலர் பண்பாடு

முனைவர் சி.பரமேஸ்வரி
உதவிப் பேராசிரியர்,தமிழ் உயராய்வு மைய
அழகப்பா அரசு கலைக்கல்லூரி,காரைக்குடி

உலகத்தில் மக்கள் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் மனித குலத்தின் வளத்திற்கு வழி செய்ய ஒவ்வொருவரும் எண்ணுதல் வேண்டும.; உலகத்திற்குச் சொந்தமான தமிழ் இலக்கியத்தில் மனிதன் மனிதத்துடன் வாழ வழி செய்யும் உலக இலக்கியக் கருத்துகள் இடம்பெற்றுள்ளன. வாழ்க்கையில் மனிதன் முழுநிறைவை அடைவதற்காக மேற்கொள்ளும் முயற்சியின் பயனாகப் பண்பாடு அமைகிறது. முழு நிறைவான வாழ்க்கை இனிமையும் ஒளியும் உடையதாகத் திகழும் என்ற உலக இலக்கியப் பண்பாட்டுணர்வு தமிழ் இலக்கியங்களில் காணப்படுகிறது. அவ்வகையில் தமிழ் இலக்கியங்களுள் ஒன்றான புறநானூற்றில் இரவலர் மனிதன் மனிதத்தோடு வாழ வழிகாட்டியும் உதவியும் நடைமுறை உலகிற்குப் பொருந்துவனவற்றை ஆராய்ந்து அவற்றை அடைவதற்குரிய வழிமுறைகளை உணர்த்தியும் பண்பாட்டுணர்வோடு வாழ்ந்தமை குறித்த செய்திகள் இடம் பெற்றமை குறித்து அறிவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**பண்பாடு**

பண்பட்ட உள்ளத்தினைக் குறிப்பதாகப் பண்பாடு அமைகிறது. “பண்படுவது பண்பாடு பண்படுதல் சீர்ப்படுதல், அல்லது திருந்துதல். திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும் திருந்திய தமிழைப் ‘பண்பட்ட செந்தமிழ்’ (தனிப்பாடல்) என்றும் திருந்திய வுள்ளத்தைப் பண்பட்ட வுள்ளமென்றும் சொல்லுவது வழக்கம”; என்பர் ஞா.தேவநேயப் பாவாணர். மேலும் பண்பாட்டுக் கூறுகளாக “எளியாரிடத்தும் இனிதாகப் பேசுவதும், புதிதாய் வந்த ஒழுக்கமுள்ள அயலாரை விருந்தோம்புவதும், இரப்போர்க் கிடுவதும் இயன்றவரை பிறருக்குதவுவதும,; கொள்கையும் மானமுங்கெடின் உயிரை விடுவதும் பண்பாட்டுக் கூறுகளாம். சுருங்கச் சொல்லின் உள்ளத்தின் செம்மை பண்பாடும். உள்ளத்திற்குப் புறம்பான உணவு, உடை, உறையுள் முதலியவற்றின் செம்மை நாகரிகமும் ஆகும்” என்பர்.

குடிமக்களைப் பேணல்

நரிவெரூஉத்தலையார், சேரமான் கருவூNரறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரலிரும்பொறையிடம் அருளையும் அன்பையும் ஒழித்துத் தீவினை புரிதலால் நரக வாழ்க்கையை எய்தி, அதிலிருந்து என்றும் நீங்காதிருப்பர். அத்தகையோரிடம் சேராதிருத்தல் வேண்டும். மேலும் நின்னால் காக்கப்படும் நாட்டைக் குழந்தையைப் பேணுதல் போலப் பாதுகாத்தல் வேண்டும். அத்தகைய காவல் அருளுடையது. இத்தகைய நிலையைப் பெறுதலும் அரியது. என்று குறிப்பிடுவதை,

“அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே” (புறநா.5;5-8)



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

என்பதால் அறியப்பெறும்.

"அருளாவது ஒன்றின் துயர் கண்டாற் காரணமின்றித் தோன்றும் இரக்கம். அன்பாவது தன்பால் புரக்கப்படுபவார்மேல் உளதாகிய காதல்"3. எனவே பிறரிடம் அருளும் அன்பும் கொண்டு நல்வினை புரிதல் வேண்டும். குடிமக்களை, குழந்தையைப் பேணுவது போன்று பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வுடையவர்களாகப் புலவர்கள் திகழ்ந்தனர்.

அருளுடன் ஈதல்

உறையூர் முதுகண்ணன் சாத்தனார், சோழன் நலங்கிள்ளியிடம் வளர்கின்ற ஒன்று குன்றுதலும் குன்றிப் போவது வளர்வதும் பிறந்தது இறப்பதும் இறப்பது பிறப்பதும் உண்மையெனக் கல்லாதவரும் அறியுமாறு செய்யக் கூடியது திங்களாகிய தெய்வம். இத்தகையத் திங்கள் இயங்கும் உலகத்தில் ஒன்றைச் செய்ய வல்லவராயினும் செய்ய இயலாதவராயினும் வறுமையால் வருந்தி வந்தோரின் வயிற்றின் பக்கங்களைக் கருதி அவர்களுக்கு அருளுடன் வழங்க வேண்டுமென்பதை,

"தேய்த லுண்மையும் பெருக லுண்மையும்
மாய்த லுண்மையும்; பிறத்த லுண்மையும்
அறியா தோரையு மறியக் காட்டித்
திங்கட் புத்தே டிரிதரு முலகத்து
வல்லா ராயினும் வல்லுந ராயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருள வல்லை யாகுமதி" (புறநா.27;11-17)

என்பதால் உணர்த்துவர்.

திங்களானது வளர்தலும் தேய்தலும் கொண்டது, இத்திங்களின் இயல்பினைப் போன்று பிறத்தலும் இறத்தலும் உடையது உலகம். இவ்வுலகத்தில் வருந்தி வந்தோர்க்கு இல்லையென்னாது வேண்டுவன அருளும் வன்மைதான் வெற்றிக்கு மாண்பு. எனவே அதனைச் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறது.

பிறந்த உயிர்கள் இறப்பதும் இறந்தது பிறத்தலும் உலகத்து இயல்பு. இத்தகைய உலகில் பசிப்பிணியால் வருந்தி வந்தோருக்கு அருளுடன் பசிப்பிணியைப் போக்கி உயிர் கொடுத்தல் வேண்டுமென்ற உணர்வுடையவர்களாகப் புலவர்கள் திகழ்ந்தனர்.

பிறன்மனை நோக்களைக் கடிதல்

பரணர், கண்ணகியைத் துறந்தொழுகும் பேகனுடைய புறத்தொழுக்கத்தைக் கேள்வியுற்றார். உடனே கண்ணகியின் பொருட்டு, பேகனிடத்துச் சென்று முன்னாள் யாங்கள் இருண்ட மாலைப்பொழுதில் நின் கானத்தைப் பாடினோம். அப்போது இளம் பெண்ணொருத்தி என்முன் வந்து அழுதாள். உடனே நாங்கள் என் தலைவனாகிய பேகனுக்கு கிளைமையுடை யீரோ என்று வினவினோம். அப்போது அவள் தம் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவன் கிளைஞரல்லேம் என்று குறிப்பிட்டு எம்மை ஒப்பான் ஒருத்தியின்மீது காதல் வயப்பட்ட பேகன், தேருடன் முல்லை வேலி பொருந்திய நல்லூருக்கு எந்நாளும் சென்று வருகின்றானென்று பலரும் சொல்கின்றனர் என்றாள். அத்தன்மையாளுக்கு நீ அருள் செய்யாதிருத்தல் கொடிது என்றுரைப்பதை,

"எம்போ லொருத்தி நலனயந் தென்றும்
வரூஉ மென்ப வயங்குபுகழ்; பேகன்


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

ஒல்லென வொலிக்குந் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே” (புறநா.144; 11 - 14)

என்பது புலப்படுத்தும்.

இதில் பேகன், அருள் செய்யாதவழி கண்ணகி உயிர் இழத்தலும் பேகனுக்குப் பழி உண்டாதலும் ஏற்படும். இதைப் பரணர் தன் நட்பின் நெருக்கத்தால் பேகனிடம் இடித்துரைத்து கண்ணகியிடம் செல்ல அறிவுறுத்துகின்றார்.

மனைவி இருக்கும்போது கணவன் இன்னொரு பெண்ணை நாடிச் சென்றால் அதனை எப்பெண்ணாலும் தாங்கிக் கொள்ள இயலாது. இதனையுணர்ந்த புலவர்கள் ஆடவரிடத்து அறிவுரைகளைக் கூறி இல்லறம் மாண்புடையதாகத் திகழ வழி வகுத்தனர்.

மேலும் பரணர், பேகனிடம் பிறருக்கு அருள் புரிவதில் வல்லவனாகிய நீ அறத்தைச் செய்தல் வேண்டும். இன்று இரவே மணிகள் பூண்ட உயர்ந்த தேரேறிச் சென்று காண்பதற்கு இன்னாதாக உறைகின்றவளும் பொறுத்தற்கரிய நின் நினைவால் காணப்படுவோளுமாகிய நின் மனைவியின் நோயைத் தீர்த்தல் வேண்டும். இதுவே யாம் நின்னிடத்து இரந்து வேண்டும் பரிசிலாகும் என்று கூறுவதை,

“அறஞ்செய் தீமோ அருள்வெய் யோயென
இஃதியா யிரந்த பரிசிலஃ திருளின்
இனமணி நெடுந்தே ரேறி
இன்னா துறைவி யரும்படர் களைமே” (புறநா.145;7-10)

என்பதால் உணர இயலும்.

இதில் பரணர், அருள் வெய்யோனாகிய பேகனிடம் யாம் இரந்து வேண்டும் பரிசில் அறஞ்செய்ய வேண்டுமென்பதாகும். அவ்வறமாவது நின்பால் அருள்பெறாமையின் இன்னா துறைவியாகிய கண்ணகியின் துன்பத்தைக் களைதல் வேண்டும் என்பதாகும். ஒரு காரணமின்றியும் அருள் செய்கின்ற பேகன், தன்னால் வருந்துகின்ற கண்ணகிக்கு அருள் செய்யாதிருத்தல் தகாது என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

புலவர்கள் பசிக்காகவோ சுற்றத்தைப் பாதுகாக்கும் பொருட்டாகவோ பரிசில் கேட்டு வரவில்லை என்பதை உணர்த்தும் தன்மையில் ‘பசித்தும் வாரேம் பாரமும் இலமே’ என்பது அமைந்துள்ளது. பரணர், பேகனிடம் நீ, நின் மனைவியுடன் சேர்ந்து வாழ்தலே யாம் நின்னிடம் இரந்து வேண்டும் பரிசில் என்றதால் மன்னனின் இல்லற வாழ்க்கையில் புலவர்களுக்கு இருந்த பற்றுள்ளம் புலனாகிறது. மேலும் கணவனுக்கு உற்ற துணையாக இருக்கும் மனைவியிடத்துத் துணைவன் அருளும் அன்பும் கொள்ளல் வேண்டும். பிறன்மனை நயக்காத பேருள்ளமும் உயர்ந்த அறமாகப் போற்றப்பெறுதல் வேண்டுமென்பதில் அக்கறை உடையவர்களாகவும் திகழ்ந்தனர்.

உயிர் வாழச் செய்தல்

பிட்டங்கொற்றன், காளைமாடுகளைத் தொழுவோடு வேண்டினாலும், நெற்களத்தில் குவித்து வைத்துள்ள நெற்குவியலை வேண்டினாலும் பெறுதற்கரிய அணிகலன்களைக் களிற்றுடன் வேண்டினாலும் அவ்வாறே தரும் பெருந்தகைமையாளன். தமக்கு மட்டுமின்றி பிறர்க்கும் அறம் செய்யும் தகைமை உடையவன். ஆதலால் எம் இறையாகிய அவனின் காலடியில் சிறுமுள்ளும் குத்தி நோவு செய்யாதிருத்தல்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

வேண்டும். கொடுப்போர் அரிதாகிய இவ்வுலகத்தில் உயிர்வாழ்வோர் வாழும்படி அவன் திருவடிகள் என்றும் நிலைபெற்று வாழ்வதாக என்று காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் வாழ்த்துகிறார்.

“இனமலி கதச்சேக் களனொடு வேண்டினும்
களமலி நெல்லின் குப்பை வேண்டினும்
அருங்கலங் களிற்றொடு வேண்டினும் பெருந்தகை
பிறர்க்கு மன்ன வறத்தகை யன்னே
அன்ன னாகலி னெந்தை யுள்ளடி
முள்ளு நோவ வுறாற்க தில்ல
சுவோ ரரியவிவ் வுலகத்து
வாழ்வோர் வாழவவன் றாள்வா ழியவே” (புறநா.171;8-15)

இதனால் பிட்டங்கொற்றன் இரவலர், வேண்டுவது எப்பொருளாயினும் எத்தகைய அளவாயினும் இல்லையென்னாது ஈதல் உள்ளம் கொண்டவன். அத்தகையோனுக்குச் சிறு தீங்கும் வரக்கூடாது என்ற எண்ணத்தால் அவன் காலடியில் சிறுமுள்ளும் குத்தக்கூடாது என்று வாழ்த்துகிறார். இவ்வுலகில் செல்வமுடையோர் பலராக இருப்பினும் ஈதல் மனப்பான்மை உடையவர் மிகச் சிலராவர். உலகில் வாழ்வோர் இனிது உயிர் வாழ்வதற்கு பிட்டங்கொற்றன் காரணமாதலை அறிந்து வாழ்த்தும் நிலையை அறியமுடிகிறது.

உலகில் வாழ்வோரெல்லாம் ஈதல் பண்பு உடையவரல்லர். பண்பட்ட உள்ளம் படைத்தோரே ஈதற்பண்பு உடையவர். வறுமையில் கொடியது பசிப்பிணி, அத்தகையப் பசிப்பிணியை நீக்கி உயிர்வாழச் செய்தலைக் கிடைத்தற்கரிய பெரும்பேறாகக் கருதும் எண்ணம் கொண்டவர்கள் புலவர்கள்.

நன்றி மறவாமை

ஆத்திரையனார், ஆதனுங்கண்பால் உள்ள அன்பினை எடுத்தோதுமிடத்து சூரிய மண்டிலத்தைப் போல நாள்தோறும் இரவு பகல் என்று பாராமல் பலரையும் பாதுகாத்து அறவழியில் மேம்பட்டு விளங்கும் நின்னை யான் மறவேன். நின்னை யான் மறப்பின் அவ்வாறு மறக்கும் காலமாவது என் உயிர், என் உடம்பை விட்டு நீங்கும் காலத்து என்னை யான் மறக்கும் காலம் உண்டாயின் அப்போது மறப்பேன் அல்லது மறவேன். ஆதலால் என் நெஞ்சைத் திறப்போர் அவ்விடத்து நின்னைக் காண்பர் என்றுரைப்பதை,

“……… ஆதனுங்கவென்
நெஞ்சந் திறப்போர் நிற்காண் டுவரே
நின்னியான் மறப்பின் மறக்குங் காலை
என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்குவென்” (புறநா.175;1-5)

என்பது உணர்த்தும். உயிர் உடம்பின் நீங்கும் காலத்தில் ஐம்புலன்களின் தொழிற்பாடும் செயலற்றுப் போதலில் மறக்கும் நிலை ஏற்படும். அன்பு செய்யப்பட்டார் அன்புடையவர் நெஞ்சில் உறைவர்.

உயிர் உடம்போடு கூடியிருக்கும்வரை பிறர் செய்த உதவியை மறத்தல் கூடாது என்ற பண்புடையவர் இரவலர்.

புரவலர் திறனறிதல்


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

பெருஞ்சித்திரனார், அதியமானிடம் நின்னிடம் பரிசில் பெறுவதற்காகப் பல்வேறு குன்றுகளையும் மலைகளையும் கடந்து வந்தேன். என்னிடம் அன்பு கொண்டு இப்பொருளைக் கொண்டு செல்வாயாகவென்று கூறுவதற்கு, பகைவரால் தடுத்தற்கரிய வேந்தன், எத்தன்மையை அறிந்தான். என்னை அழைத்துக் காணாமல் தந்த இப்பொருளுக்கு யான் ஊதியத்தை மட்டும் கருதும் பரிசிலன் இல்லை. பரிசில் வேண்டுவோரின் கல்வி முதலிய தகுதியின் அளவறிந்து விருப்பத்தோடு தினை அளவாவது கொடுத்தல் நல்லதென்பதை,

“குன்றும்; மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற வென்னயந் தருளி யீதுகொண்
டிங்கனஞ் செல்க தானென வென்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணா தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே” (புறநா. 208)

என்பது புலப்படுத்தும். இரவலர், பரிசில் பெறுவதினும் தம் மதிப்புக் குன்றாமல் பெற வேண்டுமென்று கருதினர். அரசன், தன்னைக் காணாது நல்கிய பரிசிலால் என் தகுதியை எப்படி அறிந்தான். தகுதியறிந்து பரிசில் நல்க வேண்டும். என் தரமிழந்து பரிசில் பெற்று வாழக்கூடியவனும் பொருளுக்காகப் பாடும் வாணிகப் பரிசிலனும் அல்லன் என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

புரவலர்களின் வீரம், புகழ், வெற்றிச் சிறப்பு போன்றவற்றை உள்ளது உள்ளபடி எடுத்தியம்பும் திறன் பெற்றவர்கள் இரவலர்கள். தான் பரிசில் பெற வேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டு இல்லாததைப் பொய்யுரையாகப் புகழ்ந்து கூறல் புலவர்களிடத்து இல்லை. புலவர்கள் பொருளுக்காகப் புகழ்ந்து பாடுதல் இல்லை. திறனும் பண்பட்ட உள்ளமும் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். புரவலர்கள் இரவலர்களாகியத் தன் தகுதியை அறிந்து பரிசில் நல்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர்.

நிலையாமையுணர்ந்து செயல்படல்

கோதமனார், தருமபுத்திரனிடம் ஒப்பற்ற நிலையில் உயர்ந்து வாழ்ந்தோரும் இவ்வுலகில் தம் புகழை நிலைநிறுத்தி மாண்டு மறைந்தனர். நின்னுடைய வலிமையைப் பிறர் அறியாமலும், பிறர் கூறிய சொற்களின் உட்பொருளை முழுதும் தெரிந்தும், பகற்பொழுதில் வினை செய்வார்க்கு உதவி செய்தும் இரவுப்பொழுதில் வினை செய்வார் பலரோடு இருந்து மறுநாள் செய்யக்கடவனவற்றை ஆராய்ந்தும்; தெய்வங்களுக்கு இடும் மடைபோலச் சூட்டிறைச்சியும் புழுக்கலும் வேண்டுவோர்க்குக் கொடுத்தும் சோறு வேண்டி வருவோர்க்கு உரிய இடமளித்து உண்பித்து நீயும் உண்ண வேண்டும். யமன், உயிர்களைக் கொண்டு செல்வது உண்மை, பொய்யன்று என்றுரைப்பதை,

“ஒருதா மாகிய பெருமை யோரும்
தம்புகழ் நிறீஇச் சென்றுமாய்ந் தனரே…



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

நின்னூற்றம் பிறரறியாது
பிறர் கூறிய மொழி தெரியா
ஞாயிற் றெல்லை யாள்வினைக் குதவி
இரவி னெல்லை வருவது நாடி …
மடை வேண்டுநர்க் கடையருகா
தவிழ் வேண்டுநர்க் கிடையருளி…
மடங்க லுண்மை மாயமோ வன்றே” (புறநா.366; 4-5; 8-11; 18-19; 23)

என்பது குறிப்பிடும். இதில் உலகில் நிலைபெற்று நிற்கக்கூடியது புகழ் மட்டும்தான். நாடாண்ட வேந்தர்களும் புகழ்பட வாழ்ந்து மறைந்தனர். எத்தகைய ஆளுமையுடன் வாழ்ந்தாலும் இன்பம் நுகர்ந்தாலும் பிறருக்குக் கொண்ட அருளினாலும் உலகத்தில் நிலைத்து வாழ்தல் இல்லை. இறுதிக்காலத்தில் யமன் உயிரைப் பறித்துச் செல்லுதல் உண்மை. ஆதலின் நிலைத்த புகழுக்கேற்ற செயலைச் செய்ய வேண்டுமென்பது பெறப்படுகிறது.

அரசன் வலிமையைப் பிறர் அறியக் கூடாது. பிறர் கூறியதன் உண்மைப் பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டும். பகற்பொழுதில் செய்ய வேண்டிய செயல்களைச் செய்து முடிக்க வேண்டும். இரவு நேரத்தில் பின்னர் நிகழ இருப்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். வாழ்க்கையைத் தானும் அனுபவிக்க வேண்டும். வேண்டுநர்க்குக் குறையாமல் வாரி வழங்கல் வேண்டும். உலகம் நிலையற்றது என்ற உண்மையை உணர்ந்து செயல்பட வேண்டுமென்ற பண்புள்ளம் கொண்டவர்கள் இரவலர்.

இரவலர் நிலையுணர்தல்

கல்லாடனார் அம்பரூருக்குச் சென்று அங்கு வாழ்ந்த செல்வனைப் பற்றிப் பாடினார். அவன் மனைக்கு அண்மையில் அருவந்தையின் பெருமனையும் இருந்தது. கல்லாடனார் பாடிய தடாரிப் பறையின் ஓசையானது. அருவந்தையின் செவியிற் பட்டது. இவ்விசை அருட்கடலாகிய அருவந்தையின் உள்ளத்தைப்; பிணித்தது. கல்லாடனாரைத் தன்பால் வருவித்து, அழுக்கேறிப் பீறிக்கிடந்த உடையைக் களைந்து வேறொரு வெள்ளாடை உடுப்பித்து இனிய உணவு தந்து பசி களைந்;தான்.

“அகன்கட் டடாரிப் பாடுகேட் டருளி
வறனியா னீங்கல் வேண்டி யென்னரை
நிலந்தினச் சிதைந்த சிதா அர்களைந்து
வெளிய துடீஇயென் பசிகளைந் தோனே” (புறநா.385; 4-7)

என்பதால் இரவலர் உடுத்தியிருக்கும் ஆடையைக் கொண்டு வறுமைப்பட்ட வாழ்வியல் நிலையுணர்ந்து புத்தாடை உடுத்தச் செய்து பசிப்பிணியைப் போக்குதல் வேண்டுமென்ற உணர்வு இரவலரிடத்துக்; காணப்பட்டது.

முடிவுரை

குடிமக்களிடத்து அருளும் அன்பும் கொண்டு குழந்தையைப் பேணுதல் போன்று பாதுகாத்து நல்வினை புரிதல் வேண்டும்.

பிறப்பதும் இறப்பதும் உலகத்து இயற்கை நிலையில்லா இவ்வுலகில் பசிப்பிணியால் வருந்தி வந்தோரின் பசிப்பிணியைப் போக்கி உயிர் கொடுத்தல் வேண்டும்.

பிறன்மனை நயக்காது தன்னை கொண்டவனுக்கு உற்ற துணையாக இருத்தல் வேண்டும்.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தலைப் போன்றவர்கள்.
உயிருள்ளவரை பிறர் செய்த நன்றியை மறத்தல் கூடாது.
புரவலர் திறனறிந்து பரிசில் கொடுத்தல் வேண்டும்
பிறர் கூற்றிலுள்ள உண்மைப் பொருளை ஆராய்ந்து தெளிய வேண்டும். உலக நிலையாமையை உணர்ந்து செயல்பட வேண்டும். வறுமைப்பட்ட வாழ்வியல் நிலையுணர்ந்து உண்டியும்; உடையும் கொடுத்தல் வேண்டுமென்ற பண்பட்ட உள்ளம் கொண்டவர்களாக இரவலர் திகழ்ந்தனர்.

அடிக்குறிப்புகள்

ஞா.தேவநேயப் பாவாணர், பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், பக். 13-14.
மேலது பக். 15-16.
ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, புறநானூறு மூலமும் உரையும், தொகுதி-1 ப.40.



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599